குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | நடராஜன் த–பெ சம்பந்தம் | நாள்:03.11.2022 |
| வயது | | PW 5 |
| தொழில் | | CC:111/2018 |
| காவல் நிலையம் | | Cr.No.95/2018 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 03.11.2022**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி சிதம்பரம், நீதித்துறை நடுவர் எண் 1, திருமதி. ப. தாரணி, அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது

**முதல் விசாரணை**

நான் தற்போது மடுவாங்கரையில் வசித்து வருகிறேன். நான் உணவகத்தில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் அன்று ஊரில் இல்லை. போலீசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது**

ஆஜர் எதிரி என் ஊர்க்காரர். நான் வசிக்கும் தெருவிற்கு பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். அ.சா.1 தியாகராஜனை எனக்கு தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இந்த வழக்கு சம்பவம் நடந்தபோது நான் ஊரில் இல்லை. சிதம்பரத்தில் உள்ள உணவகத்தில் தங்கி அன்றைய தினம் வேலை பார்த்தேன். வழக்கு சம்பவம் குறித்து ஊரில் என்ன பேசிக்கொண்டார்கள் என்றால் எதிரி குபேந்திரனும் அ.சா.1 தியாகராஜனும் சண்டை போட்டுக்கொண்டார்கள் என்று பேசிக்கொண்டார்கள். என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. இந்த சம்பவம் நடந்த பிறகு இதுநாள் வரை அ.சா.1 தியாகராஜனை நான் பார்க்கவே இல்லை.

தியாகராஜன் நான் வசிக்கும் தெருவிற்கு பக்கத்து தெருவில் வசித்து வருகிறார். எதிரிக்கும் அ.சா.1 தியாகராஜனுக்கும் இடையே மனை சம்பந்தமான முன்விரோதம் உள்ளது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. 04.06.2018 அன்று இரவு 10.30 மணியளவில் நான் உணவகத்தில் வேலை முடித்து வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தபோது அ.சா.1 தியாகராஜன் வீட்டு வாசலில் எதிரி குபேந்திரன் நின்றுக்கொண்டு தியாகராஜனை ஆபசமாக திட்டினார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி குபேந்திரன் அ.சா.1 தியாகராஜனை கத்தியால் தலையில் வெட்டினார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. எதிரி அ.சா.1க்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. சம்பந்தமூர்த்தி மகன்

ராம்குமார் என்பவரை எனக்கு தெரியும். காயம்பட்ட தியாகராஜனை ராம்குமாரின் இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு 8 - 9 வருடங்களாக தெரியும்.

ஆஜர் எதிரி ஊர்க்கர்காரர் என்பதாலும் எனக்கு பல வருடங்கள் பழக்கமான நபர் என்ற காரணத்தினால் எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிக்கு ஆதரவாகவும் அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

சண்டை போட்டதாகதான் சொன்னார்கள் யார் யாரை தாக்கிக்கொண்டார்கள் என்று சொல்லவில்லை.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/-Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்ற எண்.1
சிதம்பரம்

| | | |
|---|---|---|
| பெயர் | ரவி | நாள்:03.11.2022 |
| வயது | | PW 6 |
| தொழில் | சிறப்பு உதவி ஆய்வாளர் | CC:111/2018 |
| காவல் நிலையம் | | Cr.No.95/2018 |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 03.11.2022**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி சிதம்பரம், நீதித்துறை நடுவர் எண் 1, திருமதி. ப. தாரணி, அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.06.2018 அன்று நான் கிள்ளை காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது சிதம்பரம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த உலகநாதன் மகன் தியாகராஜன் என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து 13.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 95-2018 பிரிவு 294(பி), 324, 506(2) இதச படி வழக்கு பதிவு செய்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். (நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகும்). விசாரணை அதிகாரி என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

05.06.2018 அன்று மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு 12.00 மணிக்கு தகவல் கிடைக்கப்பெற்றது. அந்த விபத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் அ.சா.1யிடம் புகார் வாக்குமூலம் பெறும்போது யார் உடன் இருந்தார்கள் என்றால் அ.சா.1 மட்டும் தான் இருந்தார். யாரும் உடன் இல்லை. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை. அ.சா.1 தியாகராஜன் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை பார்ப்பதாக புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார். மனை சம்பந்தமான முன்விரோதம் அ.சா.1-க்கும் எதிரிக்கும் என்னவென்று பற்றி விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் பத்தி 8-ல் வாதியால் தாமதம் என்று குறிப்பிட்டும் என்ன காரணத்திற்கான தாமதம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார்வாக்குமூலத்தை நான்தான் எழுதினேன். புகார் வாக்குமூலத்தில் அம்பு குறியீட்டு

அப்போது கரண்ட் வந்தது என்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் அ.சா.1ம் அவருடைய மனைவியும் சேர்ந்து ஒன்றாக வீட்டு வாசலில் உட்கார்நதிருந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு அருகிலிருந்த ராம்குமார் என்பவர் ஓடிவந்து சண்டையை விலக்கிவிட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1யை தாக்கிய கத்தி எந்த வகையான கத்தி என்று நான் புகார் பதிவு செய்யும்போது அ.சா.1-ம் கேட்டு தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக அன்றைய தேதியிலேயே உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக மேல் அதிகாரி விசாரிக்கும் போது நான் உடன் இல்லை.

அ.சா.1 எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று இரவு 12.00 மணிக்கு மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைக்கப்பெற்று புகார் வாக்குமூலம் பெறப்பட்டு அந்த புகார் வாக்குமூலம் வழக்கிற்கு ஏதுவாக இல்லாத காரணத்தினால் அ.சா.1-டம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றுக்கொண்டு வழக்கிற்கு அனுசரணையாக புகார் வாக்குமூலம் தயாரித்து அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 அரசு போக்குவரத்து கழகத்தில் வேலை செய்து வருவதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விபரத்தை அ.சா.1 பணிபுரியும் இடத்திற்கு தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவயிடம் சென்று விசாரணை செய்திருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்றாலும் அவ்வாறு இல்லாததால் பொய்யான புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியில்லை.

Taken down by me in open court in the presence of the accused read over of the witness and Admitted by him / her to by correct.

(Sd/-Ms. Ba.Dhaarani)
J.M.No.1. Chidambaram